## வரலாற்றில்

# எறும்பூர்






எறும்பூர் கை. செல்வகுமார்



**திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்**



மின்னஞ்சல்- tvmchr@gmail.com செல்பேசி 9047578421

## முன்னுரை

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் ஊர்வரலாறு திட்டத்தின் கீழ் வந்தவாசி வட்டம் எறும்பூர் கிராமத்தின் ஊர் வரலாறு நூல் வெளியிடப்படுகிறது. இந்நூலை எறும்பூரை பூர்வீகமாகக் கொண்ட திரு. கை. செல்வகுமார் அவர்களின் ஆர்வத்தினாலும் முனைப்பான செயல்பாடுகளினாலும் உருவாகியுள்ளது. எறும்பூர் என்ற கிராமத்தின் வரலாறு, கோயில்கள், கல்வெட்டுகள், ஆளுமைகள் என அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சிறு நூலாக வெளிவந்துள்ளது. இந்த நூல் எழுதிய வரலாற்று ஆய்வாளர் திரு. எறும்பூர் கை. செல்வகுமார் அவர்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறோம்

இவண்,
**ச.பாலமுருகன்**
செயலர்,
திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்



மின்னஞ்சல்- tvmchr@gmail.com செல்பேசி 9047578421

## ஆசிரியர் உரை

நமது ஊர் - நமது பெருமை, நமது ஊரின் வரலாறு, முன்னோரின் வரலாறு அவர்களின் பண்பாட்டு மீட்டுவாக்கம் செய்து வழங்கினால் வரும் தலைமுறைகளுக்கு வழித்தடமாக இருக்கும் என்ற எண்ணத்தில் உருவானதுதான் இம்முயற்சி. பாரம்பரிய பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வததின் மூலம் நமது தமிழ் கலாச்சாரம் காக்கப்படும். அக்காலத்தில் வாழ்ந்த முன்னோர்கள் போன்று நல்லிணக்கம், பிறர்நலம் விரும்புதல், ஒற்றுமை, சகோதரத்துவம், மனிதாபிமானம், இறைநம்பிக்கை போன்றவற்றை தொடர்ந்து அடுத்த தலைமுறைகளுக்கும் கடத்தியாக வேண்டும். அதற்கு இப்புத்தகம் உந்துசக்தியாக தடம் பதிக்கும். இந்த புத்தகத்தை எழுத வாய்ப்பளித்த திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்திற்கு நன்றிகள்.

**எறும்பூர் கை. செல்வகுமார்.**

# உள்ளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| 1. அமைவிடம் | 4 |
| 2. பெயர்க்காரணம் | 4 |
| 3. போக்குவரத்து | 4 |
| 4. அரசுப்பள்ளிகள் | 5 |
| 5. எறும்பூர் ஊராட்சி மன்றம் | 6 |
| 6. பொதுத்தகவல்கள் | 7 |
| 7. கோயில்கள் விவரம் | 8 |
| 8 ஆளுமைகள் | 10 |
| 9. வரலாற்று சிறப்பு மிக்க நினைவுகள் | 12 |
| 10. பொதுக்குளம் | 13 |
| 11. வரலாறு | 15 |
| 12. கோயில் அமைப்பு | 16 |
| 13. கல்வெட்டுகள் | 20 |

## 1. அமைவிடம்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், வந்தவாசி – ஆரணி நெடுஞ்சாலையில் 10.கி.மீ தொலைவில் நெ.103 எறும்பூர் கிராமம் அமைந்துள்ளது. கிழக்கில் சுண்ணாம்புமேடு – தென் சேந்தமந்தங்கலம் குன்றுகள், மேற்கே மேல்பாதி அதையொட்டி எறும்பூர் பெரிய ஏரி, சீத்தேரி வடக்கில் கீழ்குவளைவேடு பெரிய ஏரி, தெற்கில் ஆராசூர் மடுவு என்னும் நிலவியல் எல்லைகளாக உள்ளது. எறும்பூரைச் சுற்றி மதுரா கிராமங்களான தென்கிழக்கில் சிவந்தாங்கல், தெற்கில் அண்டவெட்டித்தாங்கல், ஈசன்தாங்கல் நீரோடை மேற்கில் மோட்டூர் (எ) செங்கல்வராயபுரம் உள்ளது.

வரலாற்று பார்வையில் சோழமண்டலம் வெண்குன்றக் கோட்டத்தில் இவ்வூர், ஆயிரம் ஆண்டுகள் பழமை மாறாதப் பண்பாட்டுத் தளமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## 2. பெயர் காரணம்

ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த இராஜராஜ சோழன் காலத்தே, பாறை கல்வெட்டில் எறும்பூர் என்று குறிப்பிடப்பட்டு இன்றுவரை அதேபெயரில், இயல்பாக அழைக்கப்படுகிறது. ஆரம்ப காலத்தில் இவ்வூர் வீரசோழநல்லூர் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மேலும் பழங்காலத்தில் எறும்புலி சித்தர் வசித்ததாலும், எறும்பு போல் சுறுசுறுப்பாக உழைக்கும் மக்கள் இருந்தாலும். தொன்மை வாய்ந்த வரலாற்று தளமாக இவ்வூர் எறும்பூர் என்ற பெயரைத் தாங்கியுள்ளது.

## 3. போக்குவரத்து

எறும்பூர் வழியாக வந்தவாசியிலிருந்து பெரணமல்லூர் செல்லும் நகரப் பேருந்து இயக்கப்பெறுகிறது. எறும்பூர் கூட்டுச்சாலை வழியாக ஆரணி, செங்கம், போளூர், திண்டிவனம், புதுச்சேரி, திருவண்ணாமலை உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லும் முதன்மை சாலை அமைந்துள்ளது.

## 4 அரசு பள்ளிகள்

1957-58 ஆம் கல்வியாண்டில் அப்போதய முதல்வர் கர்மவீரர் காமராசர் 17-10-1958 இல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் துவங்கி வைத்துள்ளார். அப்போது ஊராட்சி மன்றத் தலைவராக எஸ். பார்த்தசாரதி நாயுடு தலைமையில் குழுவினர் ஏற்பாடு செய்தனர். கீழ்குவளைவேடு, தென்சேந்தமங்கலம், சுண்ணாம்புமேடு, ஆராசூர், அண்டவெட்டித்தாங்கல், ஆணைபோகி, விளாநல்லூர், மேல்நெமிலி, வல்லம் போன்ற கிராமங்களிலிருந்து மாணவ – மாணவியர் அப்பள்ளியில் பயின்றனர்.

நெசவு உள்ளிட்ட தொழிற்கல்வியுடன் கூடிய உயர் தொடக்கப்பள்ளியாகவும், வந்தவாசி வட்டாரத்தில் சிறந்த நடுநிலைப் பள்ளியாகவும் அப்பொழுதே இப்பள்ளி இருந்துள்ளது.

1955 - 58 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் ஆதிதிராவிட நல ஆரம்பப் பள்ளி கட்ட, அந்த ஊரின் நாட்டாமைத்தாரர்கள் நிலம் ஒதிக்கித்தந்து, கட்டுமானப் பணிகளுக்கு உதவியதாகக் கூறப்படுகிறது. ஊர் நாட்டாமை தாரர்களான அப்பாவு மகன் கைலாசம், கிரகன் மகன் முத்து, சித்திரைவேல் மகன் குப்பன், முண்டக்கண்ணன் மகன் படவேட்டான், கேணி மகன் முருவன், வளவன் மகன் சுப்பராயன், மதுரை மகன்கள் கோவிந்தராஜ் மற்றும் வரதன் ஆகியோர் பெயரில் நிலம் (பட்டா எண் : 1068, புலன் எணிகள் : 76/1, 76/2, 76/3, 76/4 ஆகியவற்றில் 1.2800 ஹெக்டர் பரப்பளவு) ஒதுக்கி ஊர் பொதுமக்களின் நலனுக்காக நிரந்தர இருப்பாக வைத்துள்ளனர். தனி நபர் ஆக்கிரமிப்பு இருக்க கூடாது மேலும் இதன் உண்மை தன்மை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

### கல்வி வளர்ச்சிப்பணியில் ஈடுபட்டு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்

இந்திரவனம் எல்லப்பன்; சிவந்தாங்கல் அப்பாசாமி செட்டியார்; தேசூர் பச்சைவண்ணன்; தென்சேந்தமங்கலம் குணபாலன்; எறும்பூரை சேர்ந்த இராமனுஜப்பிள்ளை, சீதாராமன், ப.இராமதாஸ், வீ.முத்தியால், நே.சுந்தரதாஸ், ஜிவேந்திரன், ஐயண்ணன், பரதசக்கரவர்த்தி, அஜித்தாஸ், சு.வரதன், ப.ஜெலேந்திரன், மற்றும் ப.சந்திரன், கை.செல்வகுமார், வந்தவாசி சுப்பிரமணி, ஆறுமுகம், ஏழுமலை, ஆயிலவாடி கன்னியப்பன்; விளாநல்லூர் சீனிவாசன் மற்றும் வேங்கடபதி; கண்டவரட்டி இராமசாமி, கீழ்குவளைவேடு வங்காரம் சுப்பிரமணி ஆகியோர் எறும்பூர் மற்றும் சுற்று வட்டாரத்தின் ஆசிரியர் பணியில் தங்களை ஈடுபடுத்தி மாணவர்களுக்கு தரமான கல்வியினை வழங்கியுள்ளனர். மேலும் இவர்களில் சிலர் வெளியூர் பள்ளிகளில் கல்வி சேவை வழங்கியுள்ளனர்.

## பிற அரசு அலுவலகம்

கிளை அஞ்சல் அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், அங்கன்வாடி மையம், நியாயவிலைக்கடை, மருத்துவ கால்நடை மையம், நூலகம், ஊராட்சி மன்ற கட்டிடம் உள்ளிட்ட அரசு அலுவலகங்கள் உள்ளன. ஆரம்ப சுகாரநிலையம் தேவையாக உள்ளது.

## 5. எறும்பூர் ஊராட்சி மன்றம்

நாட்டின் முதல் ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே இவ்வூரில் ஊராட்சி மன்றம் உருவாக்கப்பட்டது. 1952 ஆம் ஆண்டில் முதல் ஊராட்சி மன்ற தலைவராக சோமகீர்த்தி நைனார் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டு, ஊரின் சமூக நலமேம்பாட்டிற்கு வித்திட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து எஸ்.பார்த்தசாரதி நாயுடு என்பவரும் ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவராக ஆன்மீகம், சமூகச்சேவை, அரசு நலத்திட்டங்கள் என அனைத்திற்கும் துணைநின்று, நல்லிணக்கச் செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இந்த ஊராட்சி மன்றம் இன்றைய நிலையில் ஆறு வார்டுகளைக் கொண்டுள்ளது.

| | |
|---|---|
| சோமகீர்த்தி நைனார் | - 1952 – 1956 |
| எஸ்.பார்த்தசாரதி நாயுடு | - 1956 – 1972 |
| சக்கரவர்த்தி நைனார் | - 1972 – 1977 |
| (1978 – 90 எவருமில்லை) | |
| தரனேந்திரன் நைனார் | - 1991 – 1996 |
| பா.ஜெயராமன் | - 1996 – 2001 |
| ப.ஜெலேந்திரன் | - 2001 – 2006 |
| ஓ.சண்முகம் | - 2006 – 2011 |
| ஓ.காசி | - 2011 – 2016 |
| பி.மஞ்சுளா | - 2020 முதல் |

# 6.பொது தகவல்கள்

## நீர் நிலைகள்

பெரிய ஏரி, சித்தேரி எனும் இரண்டு ஏரிகள்

மதுரா கிராமமான – சிவந்தாங்கல், அண்டவெட்டித்தாங்கலுக்கு தனித்தனி ஏரிகள் உள்ளன. ஈசன்தாங்கல் நீரோடையும் உளளன.
பெரிய குளம் ஊரின் பிரதான குடிநீருக்கான ஆதாரமாக உள்ளது. இக்குளத்தின் அருகே தொன்மை வாய்ந்த அரசமரம் ஒன்றுள்ளது. இக்குளம் அக்காலத்தில் கரியமாணிக்க வரதராஜப்பெருமாள் கோயிலின் தெப்ப உற்சவக்குளமாக இருந்துள்ளது. மேலும் இவ்வூரில் மூன்று குளங்களும் உள்ளன.

**நிலவரி –**
வரிவசூல் - 4840.00 மட்டும்
பிரதான தொழில் விவசாயம், மற்றும் விவசாய கூலிகள்

**நீர்பாசன ஆதாரம் –**
பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் பெரிய ஏரி மற்றும் சித்தேரி
நீர் பாச்சல் காலம் 6 மாதங்கள்

**நீர் வரத்து -**
நாகநதி
ஆயலவாடி ஏரி வடிகால் நீர்
சுகநதி மூலம் மேல்பாதி ஏரி நீர்
கீழ்குவளைவேடு பெரிய ஏரி உபரி நீர் – ஆகியவற்றின் வழியே நீர்வரத்து நிகழ்கிறது

**மக்கள் தொகை**

| | |
|---|---|
| ஆண்கள் | 586 |
| பெண்கள் | 639 |
| மொத்தம் | 1225 |
| மொ.குடும். | 372 |

**வேளாண்மை -**

| | |
|---|---|
| நன்செய் | - 170.59.0 ஹெக்டர் |
| புன்செய் | - 387.77.0 ஹெக்டர் |
| புறம்போக்கு | - 257.80.5 ஹெக்டர் |
| மொத்தம் | 816.16.5 ஹெக்டர் |

# 7, கோயில்கள் விவரம்

- புராதன கோயில்களாக - அருள்மிகு திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ மஹாசிவ பட்ஷீஸ்வரர் திருக்கோயில்,
- அருள்மிகு ஸ்ரீ பெருந்தேவி நாயகி சமேத ஸ்ரீ கரியமாணிக்க வரதராஜப்பெருமாள் திருக்கோயில், அருள்மிகு முத்தியாலம்மன் திருக்கோயில்
- அருள்மிகு பாஞ்சாலி சமேத ஸ்ரீ தர்மராஜா திருக்கோயில்,
- அருள்மிகு ஸ்ரீ மூதா அம்மன் திருக்கோயில்,
- அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரன் திருக்கோயில்,
- அருள்மிகு ஸ்ரீ துர்கையம்மன் திருக்கோயில்,
- அருள்மிகு பிள்ளையார் கோயில்,
- அருள்மிகு சீதா லட்சுமண பரத சத்ருக்ன ஹனுமன் சமேத ஸ்ரீ ராமசந்திர பஜனை மடம்,
- அருள்மிகு மகாசக்தி மாரியம்மன் திருக்கோயில்,
- அருள்மிகு கன்னியம்மன் கோயில்,
- பக்த அஞ்சநேயர் கோயில்,
- பஜனைக்கோயில்கள்,

மதுரா கிராமங்களான சிவந்தாங்கல், அண்டவட்டித்தாங்கல், செங்கல்வராயபுரம் ஆகிய அனைத்து பகுதிகளிலும் சிறுதெய்வ வழிபாடுகள் நடைபெறுகின்றன. கெம்பீரன் - எல்லம்மாள் தம்பிரான் வாரிசுகள் அம்மன் கோயில்களுக்கு தொன்று தொட்டு பூசை செய்து வருகின்றனர்.

**கோவில்களுக்கான நிலங்கள்**

அருள்மிகு காரியமாணிக்க வரதராஜபெருமாள், அருள்மிகு. பட்ஷீஸ்வரர் கோயில் உள்ளிட்ட அறப்பணிகளுக்காக தன்வந்தர்கள் நிலங்களை தானமாக எழுதி வைத்து கோயில் மான்யம் வருவாயில் கோயில் விழா மற்றும் இதர அறப்பணிகளுக்கு செலவிடப்படுகிறது.

### ஐம்பொன் சிலைகள் - சிற்பங்கள்

நடராஜர் சிலை, அம்மன் சிலை, துர்கையம்மன் சிலை, சீதேவி-பூதேவி சமேத கரியமாணிக்க வரதராஜர் சிற்பங்கள்

கொற்றவை சிற்பம், அய்யனார் சிற்பம் உள்ளிட்ட பல பழமையான சிற்பங்கள் உள்ளன.

## திருவிழாக்கள்

சித்திரை பௌர்ணமி திருவிழா, புரட்டாசி விழா, ஆடிவெள்ளி விழா, அக்னி வசந்தவிழா, பொங்கல் விழா, ஊர்கூடி பொங்கல், கூழ்வார்க்கும் விழா, சிறுதெய்வ வழிபாடுகள் விழாக்களாக நடைபெறுகின்றன.

### நாட்டுப்புறவியல் கலைஞர்

பூப்பு எய்துதல், திருமணம், வேளாண்மை, இறப்பு போன்ற நிகழ்வுகளின் பொழுது கதைப்பாடல்கள், நாட்டுப்புற பாடல்கள் பாடுவதில் வல்லவராகவும்; தெருக்கூத்து நிகழ்வுகளை நிகழ்த்தி மக்கள் மனங்களில் நீங்காது இடம்பெற்றவராகவும் நாட்டாண்மை.அ.கைலாசம் இருந்துள்ளார். இவருக்கு துணையாக நாட்டுப்புற கலைஞர்கள் சிலர் மறக்கவியலா பக்க வாத்தியங்களாக இருந்துள்ளனர்.

# 8. ஆளுமைகள்

எஸ்.பார்த்தசாரதி நாயுடு – 15 ஆண்டுகால பஞ்சாயத்து தலைவர்
ஜட்ஜ் பலராமய்யா - பழமையான சித்த வைத்தியர்
கேசவ வரதப்பட்டாச்சாரியார் - கோயில் குருக்கல்
ஜெயராமப்பிள்ளை – கர்ணம் / மணியக்காரர்கள் சங்கம்
சோமகீர்த்தி ஜெயின் – சமணத் துறவி
ஊரின் முதல் அரசு அலுவலர் -மலேரிய அலுவலர் அ.கனகராஜ்,
வட்டாச்சியர் – அ.ஆறுமுகம்
துணையாட்சியர் – நே.இளங்கோவன்
தற்கால ஆண்மிக சேவர்கள் பா.ஸ்ரீராமஜெயம் மற்றும் கண்ணப்பன் குழுவினர்



எஸ்.பார்த்தசாரதி நாயுடு
20 ஆண்டுகால
பஞ்சாயத்து தலைவர்




சோம கீர்த்தி நைனார்
சமனத்துறவி



24 10 1980 அருள்மிகு பற்றி சிலர் கோயில் குடமுழக்கு விழாவில் பங்கேற்ற தமிழக கவர்னர் பிரபுதாஸ் பட்வாரி அவர்களுடன் ஓய்வு பெற்றமாவட்ட நீதிபதி எஸ் .பி. பலராமையா (பிரசித்தி பெற்ற சித்த வைத்தியர்)அவர்கள்.



**நாட்டுப்புறவியல் கலைஞர், நாட்டாமை அ. கைலாசம்**

## 9. வரலாற்று சிறப்பு மிக்க நினைவுகள்

- 17-101958 அப்போதய முதல்வராக இருந்த பெருந்தலைவர் காமராசர் எறும்பூர் பள்ளியைத் துவங்கிவைத்த நினைவு.
- தமிழக கவர்னர் பிரபுதாஸ் பல்வாரி அவர்கள் அருள்மிகு பட்டீஸ்வரன் கோயில் குடமுழக்கு விழா (24-10-1980) நிகழ்விற்கு வருகைதந்த நினைவு
- ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு.எஸ்.பி.பலராமய்யாவை சந்திக்க – கோவையைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஜி.டி.நாயுடு வருகை தந்த நினைவு

**நல்லிணக்கம் – ஒருமைப்பாடு – நீங்கா நினைவுகள்**

கம்மவார் நாயுடு, ஜெய்னர்கள், வேட்டைக்காரர்கள், ஆதிதிராவிடர், வன்னியர், யாதவர், தொழிலாளர்கள், இருளர்கள், அருந்ததியர் என பிரிவுகள் பல இருந்தாலும் உயர்வு தாழ்வற்ற சமத்துவபுரமாக பழம்பெரும் பண்பாட்டு அசைவுகளைக் காத்துவருபவர்களாக இவ்வூர் மக்கள் இன்றளவும் வசித்துவருகின்றனர் என்பது சிறப்பு தகவல் ஆகும்.

எறும்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கோவிலூர் அரசுப்பள்ளி – ஆங்கிலேயர் கால பங்களா, கிழ்குவளைவேடு வந்தவாசி பள்ளிகள், ஊர் பொதுக்குளம் (தெப்ப குளம்), நந்தவனம், நாகரத்தின நாயுடு ரைஸ்மில், செக்குமாடு கரும்பு ஆலைகள், கட்டை மாட்டு வண்டிகள், குலவி சத்தம் போடும் பொங்கல் விழா பல்வேறு நாடக, கூத்து கலைஞர்களின் அசைவுகள், அஞ்சல் சேவகர்கள் வாசுதேவன், கோவிந்தன், தேவேந்திரன் ஆகியோரது தகவல் தொடர்புகள், ஊர் பெருந்தனக்காரர்கள், தர்மகாரியங்கள், நலம் விசாரிக்கும் மரியாதைகள் நீங்கா நினைவுகளாக பயனிக்கிறது.

## சேவை அமைப்புகள்

தமிழ் சங்கம் எறும்பூர், திருவள்ளுவர் இளைஞர் நற்பணி மன்றம், பல்வேறு இளைஞர் நற்பணி அமைப்புகள், ஆண்மிக தொண்டு சேவகர்கள் என தன்னார்வலர்கள் சமூக ஒற்றுமை, இறைவழிபாடு, நல்லிணக்கம் ஆகியவற்றிற்கு அற்பனிப்புடன் சேவை செய்து வருகின்றனர்.

## 10. பொதுக்குளம் (தெப்பக்குளம்)

எறும்பூர் கிராமத்தில் கி.பி.9-ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி.10-ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் நாயக்கர் – சோழர் காலத்தில் வெட்டப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. இக்குளத்தின் அருகில் பெரிய அரசமரம் அதனடியில் நாக கற்சிற்பமும் அமைக்கப்பட்டு வழிபாடு நடந்து வருகிறது. இக்குளத்தின் அருகி கங்கையம்மன் கோயில் உள்ளது இக்குளத்திற்கு சற்று தொலைவில் முத்தியாலம்மன் கோவிலும் அதனை அடுத்து பட்டீஸ்வரர் கோயிலும், ஜெயினர் கோயிலான ஆதிஸ்வரர் மஹாவீரர் கோயில் அதனை தொடர்ந்து கரியமாணிக்க வரதராஜப்பெருமாள் கோயிலும் உள்ளது.

இந்தக்குளத்தினுடைய நீளம் 300 மீட்டர் நீளமும் அகலம் 150 மீட்டரும் என செவ்வக வடிவில் அமைந்துள்ளது. குளத்தினுள் உட்குளமும் உள்ளது. உட்குளத்தின் அருகில் கிணறும் உள்ளது. மழைக்காலங்களில் நீர் நிரம்பி வடிக்கால் வழியாக கிழக்குப்புறம் வயல்வெளிகளுக்கு செல்லும்.

1950-களில் அருள்மிகு.ஸ்ரீதேவி பூதேவி சமேத கரியமாணிக்க வரதராஜபெருமாள் கோயில் திருவிழாவின் பொழுது தெப்பல் உற்சவம் நடந்துள்ளதால் இக்குளம் அப்போது தெப்பக்குளம் என்று அழைக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் ஊராட்சி மன்றத்தலைவராக இருந்த எஸ்.பார்த்தசாரதி நாயுடு தமையிலான குழுவினர் தெப்பல் உற்சவத்தை நடத்தியதாக கூறப்படுகிறது.

இக்குளம் அவ்வப்போது புனரமைக்கப்பட்டும் வந்துள்ளது. 90-சதவீத மக்களின் குடிநீரை வழங்குவது மட்டும் இன்றி கால்நடைகளுக்கு நீர் வழங்கி வருகிறது. வறட்சி காலத்தில் குடிநீர் பற்றாக்குறையை போக்க 2006-2011 ஆண்டு காலகட்டத்தில் கிணறு தோண்டப்பட்டு எப்பொழுதும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடதக்கது. தற்போதைய நவீன காலத்திலும் குடிநீரில் மாற்றங்கள் பல இருந்தாலும் இவ்வூர் மக்கள் இக்குளத்தின் நீரை மட்டுமே குடிநீராக பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வூரில் இரட்டை குளம், பெரிய குளம், பொதுக்குளம் என நான்கு குளங்கள் இருந்தாலும், இவ்வூரின் பழமையான குளமாக தொன்று தொட்டு பாரம்பரிய பண்பாட்டு சின்னமாக இவ்வூர் பொதுக்குளமானது (தெப்பக்குளம்) இருந்து வருகிறது. இதை மேலும் புனரமைத்து பாதுகாப்பது இன்றைய தலைமுறையினர்களுக்கு கடமையாகும். மேலும் பட்சீஸ்வரர் கோயில் அருகே ஒரு குளம் இருந்ததாகவும் அதன் தடயத்தைத் தேடி கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.



# 11. வரலாறு

வரலாற்று ரீதியாக, தொண்டை மண்டலத்தின் முக்கியப் பகுதியில் அமைந்துள்ளது எறும்பூர். கிராமம். இக்கிராமம் அமைந்துள்ள பகுதி வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த கல்வட்டடங்கள் அருகில் உள்ள எச்சூர் கிராமத்தில் கிடைத்துள்ளது. சங்க இலக்கியங்கள் புகழும் காஞ்சிபுரத்திற்கு அருகில் அமைந்த ஊராகும். இந்த பகுதி காஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்ட பல்லவர்கள் ஆளுகைக்கு உட்பட்ட இடமாகும். இதற்குச் சான்றாக பல பல்லவர்காலகல்வெட்டுகளும் சிற்பங்களும் கோயில்களும் இவ்வூரிக்கு அருகில் உள்ளன. இவ்வூர் சோழர் காலத்தில் சிறப்புற்றிருந்தது என்பதற்கு ஆதாரமாக இவ்வூர் தெருவில் உள்ள பாறையில் முதலாம் இராஜராஜன் கல்வெட்டு கிடைத்தது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவ்வூரில் விஜயநகர காலக்கல்வெட்டுகளும் பல கிடைத்துள்ளன. எனவே எறும்பூர் கிராமமான சுமார் 2000 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான ஊராக இருக்கலாம்.



பழமையான அகன்ற வீதி கொண்ட ஜெயினர் தெருவும் ஜெயினர் கோயிலின் முகப்பு தோற்றமும்

## 12. கோயில்கள் அமைப்பு

### அருள்மிகு திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ மஹாசிவ பட்ஷீஸ்வரர் கோயில்

எறும்பூர் கிராமத்தின் முக்கிய இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய இக்கோயில் நுழைவாயிலும் திருச்சுற்றும் அதனுள் மகாமண்டபம், அர்த்தமண்டபம் கருவறை என எளிமையான அமைப்பில் காணப்படுகிறது. விமானம், மூலவர் சன்னதி, அர்த்தமண்டம், திரிபுரசுந்தரி அம்பாள் சன்னதி, நந்தி மண்டபம், மகாமண்டபம், உள் மற்றும் வெளிப்பிரகாரங்கள் அமைப்புகளுடன் கலை நயத்துடன் காணப்படுகிறது. இங்கு வற்றாத தீர்த்தக் கிணறு ஒன்றும் உள்ளது. மகாமண்டபத்தின் வடகிழக்கில் நவகிரகங்கள் பன்னிரண்டு ராசிகளுக்கான சின்னங்களின் மேல் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடக்கிறது விநயாகர், முருகன், தட்சணாமூர்த்தி மகாவிஷ்ணு, பிரம்மா, துர்கை, சண்டிகேஸ்வரர் போன்ற பரிகார தேவதைகளின் திருவுருவச் சிலைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. கருவறைக்கு இடப் புறத்தில் பூரணை புஷ்கலை சமேதராக அய்யனார் தனி சன்னிதியில் அமைக்கப்பட்டுள்ளது. அவருக்கு முன்பாக கஜவாகனம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.



பட்ஷீஸ்வரர் கோயில்- பழைய தோற்றம்

**வழிபாடு**

பௌர்ணமியன்று சிறப்பு பூசைகள், வழிபாடுகள் நடைபெறுகிறது. அனைத்து பிரதோஷ நாட்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் விஜயநகர கால கல்வெட்டுகள் மூன்று உள்ளன. அதில் சில கட்டுமானத்தின் போது மாற்றியமைக்கப்பட்டதால் முழுமையாக இல்லை.

**கரியமாணிக்க வரதராஜர் கோயில்**

இவ்வூரின் தென்மேற்குப் பகுதியில் கரியமாணிக்க வரதராஜ பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் பாழடைந்த நிலையில் இருந்ததால் தற்போது புதுப்பிக்கும் பணி நடைபெற்றுவருகிறது. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் கருடன், தாயார் சன்னதி ஆகியவை முறையாக அமைந்துள்ளன. கருவறையில் மூலவராக கரிய மாணிக்க வரதராஜப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி யுடன் காட்சியளிக்கின்றனர். இக்கோயில் கட்டுமானம் மற்றும் கிடைக்கும் கல்வெட்டுகளின் படி இதன் காலம் 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டினதாகலாம். மேலும் இக்கோயில் தற்போது முற்றிலும் புதியதாக கட்ட திருப்பணிக் குழுவினர் செய்துவருகின்றனர்.



பூதேவி ஸ்ரீதேவி சமேத கரியமாணிக்க வரதராஜர்

# கோயில்கள் புகைப்படங்கள்



அருள்மிகு பட்டீஸ்வரர்



சிதிலமடைந்த கரிய மாணிக்க வரதராஜ பெருமாள் கோயில்





அருள்மிகு முத்தியாலம்மன்





அருள் மிகு மூதா என்னும் மாரியம்மன்





அருள் மிகு மகாசக்தி மாரியம்மன் கோயில்.

# 13. கல்வெட்டுகள்

எறும்பூர் கிராமத்தில் 5 கல்வெட்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் ஊரின் நடுவில் உள்ள பாறையில் முதலாம் இராஜராஜன் கல்வெட்டும், பட்சீஸ்வரர் கோயிலில் 3 விஜயநகர கால கல்வெட்டும், கரியமாணிக்க பெருமாள் கோயிலில் துண்டு கல்வெட்டுகள் 2 கிடைக்கின்றன.

இக்கல்வெட்டு குறிப்பிலிருந்து இவ்வூர் பெயர் எறும்பூர் என்றும் தொடர்ந்து அதே பெயரில் வழங்கிவருவதும் அறியமுடியகிறது. மேலும் இக்கல்வெட்டு மூலம்

**கல்வெட்டு எண் – 1**

இடம் – எறும்பூர் கிராம ஊரின் மையத்தில் உள்ள பாறை.

காலம்- 10 ஆம் நூற்றாண்டு

அரசன் – முதலாம் இராஜராஜன்.

குறிப்பு- இராஜராஜசோழனின் 2 ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு (10 ஆம் நூற்றாண்டு) இருந்தது. இதில் வெண்குன்றக்கோட்டத்து எறும்பூர் என்ற ஊர் அம்பத்திற்கு நக்கன் மாதானியன் என்பவன் 45 ஆடுகள் தானமாக அளித்த செய்தி கல்வெட்டாக உள்ளது.



1.[ காந்தளூர்] சாலை
2......கோவி ராஜராஜ கேசரி
3.....பன்மற்கி 2 ஆவது
4..[வெண்]குன்றக்கோட்டத்து
5.....நாட்டு எறும்பூர் (உ)அ
6.....ன் மாதானியேன் இ...
7....(அ) ம்பலத்திற்கு
8....வைய்த்த ஆடு நாற்பத்
9.தைஞ்சும் வைத்தே
10.நக்கன் மாதா
11.னியேன் இ
12...[ரி]விப்பான் ஸ்ரீபாத..
13.என்றலை மேலது இந்த தன்மம்
14.காப்பான் கங்கை இடை
15.......

## கல்வெட்டு எண் 2

இடம் – எறும்பூர் சிவன்கோயில் படிக்கட்டுப்பகுதிகள்.
காலம் – விஜயநகரர், வீரநரசிம்மன், சகம் 1400 பொ.ஆ. 1478.
குறிப்பு- பிரம்மீஸவரமுடையார் கோயிலில் காமக்கோட்டமுடைய பெரியநாச்சியாரை எழுந்தருளவித்த செய்தி.

1. … யாண்டு 7 வது மகா ….
2. கொண்ட சோழமண்டலத்து வெண்…
3. ல்லூரில் உடையார் பிரமீசுவரமுடைய னா…
4. ன் கோதம கோத்ரத்து கண்ணாரமுத பட்ட….
5. ட்ட முடைய பெரியநாச்சியாரை ஏறி அருள
6. மை ஓடு இருந்தானேன் இத்திருக்…



## கல்வெட்டு எண் – 3

இடம் – எறும்பூர் சிவன்கோயில் படிக்கட்டுப்பகுதிகள்.
காலம் – விஜயநகரர், வீரநரசிம்மன், சகம் 1400 பொ.ஆ. 1478.
குறிப்பு- பிரம்மீஸவரமுடையார் கோயிலில் காமக்கோட்டமுடைய பெரியநாச்சியாரை எழுந்தருளவித்த செய்தி.

1. 14வது வெண்குன்றக்கோட்டத்துக்கு…
2. ன்றூருடையான் பாழிநட்டனேன் எறும்பூர் ஊரார்
3. க்காலேயரைக்காலஞ்சு தண்ட எறும்பூர் ஊர்.
4. இந்தநம்ம ரக்ஷீத்தார் ஸ்ரீபாதம் எ…



**கல்வெட்டு எண் 4.**

இடம் – எறும்பூர் சிவன்கோயில் படிக்கட்டுப்பகுதிகள்.
காலம் – விஜயநகரர், வீரநரசிம்மன், சகம் 1400 பொ.ஆ. 1478.
குறிப்பு- நிலதானம் செய்த தகவல்.

1. நரஸி… தேவம
2. …காத்தம் 1400 மேல் செல்ல
3. ..தேவ மஹாராயருக்கு புண்ணி…
4. …பெருமாளுக்கு நாலிலொன்றும்…



**கல்வெட்டு எண் – 5.**

இடம்- பெருமாள் கோயில் பின்பக்க அதிட்டானப்பகுதி.
காலம் – 11, 12 ஆம் நூற்றாண்டு
குறிப்பு – சந்திவிளக்கு எறிக்க, மற்றும் பணம் வழங்கிய தகவல்.

1. முங்கைக்கொண்(டு) சந்தி விளக்கு ஏழரை நாழிகை நாலு விளக்கு சந்(தி)
2. (தருமுகர்க்) குழைக்காதனேன் கைக்கொண்ட பணம் பதினா(று)



**கல்வெட்டு எண் 4.**

இடம் – எறும்பூர் சிவன்கோயில் படிக்கட்டுப்பகுதிகள்.
காலம் – விஜயநகரர், வீரநரசிம்மன், சகம் 1400 பொ.ஆ. 1478.
குறிப்பு- நிலதானம் செய்த தகவல்.

1. நரஸி… தேவம
2. …காத்தம் 1400 மேல் செல்ல
3. ..தேவ மஹாராயருக்கு புண்ணி…
4. …பெருமாளுக்கு நாலிலொன்றும்…



**கல்வெட்டு எண் – 5.**

இடம்- பெருமாள் கோயில் பின்பக்க அதிட்டானப்பகுதி.
காலம் – 11, 12 ஆம் நூற்றாண்டு
குறிப்பு – சந்திவிளக்கு எறிக்க, மற்றும் பணம் வழங்கிய தகவல்.

1. முங்கைக்கொண்(டு) சந்தி விளக்கு ஏழரை நாழிகை நாலு விளக்கு சந்(தி)
2. (தருமுகர்க்) குழைக்காதனேன் கைக்கொண்ட பணம் பதினா(று)



திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்
இக்கல்வெட்டுகளை 2019 இல் பதிவு செய்தது.



பட்சி



**எறும்பூர் கை. செல்வகுமார்**

## ஆசிரியர் குறிப்பு

வந்தவாசி வட்டம் எறும்பூர் கிராமத்தை பூர்வீகமாக கொண்டவர். இலக்கியத்தில் காதல் கொண்டு தமிழ்ப்பணியில்தமிழ்த்தாயின் புதல்வனாய் ஆசிரியரானதால், ஆய்வளனாய், நல்லதொரு சமூக செயல்பாட்டாளனாய் இருந்துவருகிறார். தமிழ்ச்செம்மல், நல்லாசிரியர், ஆசிரியர் செம்மல், ஆய்வுலக அறிஞர் உள்ளிட்ட பல விருதுகள், பட்டங்கள் பெற்றுள்ளார். ஆசிரியராக நீண்டகாலம் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்**

மின்னஞ்சல்- tvmchr@gmail.com செல்பேசி 9047578421